தாராபுரத்தின் தன்மானம் காக்க – 'ரீல்ஸ்' முதல்வரின் ஆணவத்துக்குப் பதிலடி தர

அக்.6 - அன்று கழக வேட்பாளரை வெற்றி பெறச் செய்வீர்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, அக். 4 - தாராபுரத்தில் நடைபெற்ற ரோடு ஷோ மற்றும் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் "தாராபுரத்தின் தன்மானம் காக்க - 'ரீல்ஸ்' முதல்வரின் ஆணவத்துக்குப் பதிலடி தர கழக வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யா அவர்களை வெற்றி பெறச் செய்வீர்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

இடைத்தேர்தல்: வாக்காளர்களின் கண்ணியத்திற்கு முதலமைச்சர் விட்டிருக்கும் சவால்!

மக்களிடம் பெற்ற வாக்குகளை விற்ற ஒரு வேட்பாளர் அதை விலை பேசி வாங்கிய ஒரு கட்சி. இவர்களுக்கா உங்கள் வாக்கு?

பெரும்பான்மையான மக்களின் ஆதரவில்லாத "ரீல்ஸ்" முதலமைச்சரின் ஆணவத்துக்குப் பதிலடி கொடுக்க, தாராபுரத்தின் தன்மானம் காக்க அக்டோபர் 6ஆம் நாள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து சகோதரி வழக்கறிஞர் சுகன்யா அவர்களை வெற்றிபெறச் செய்யுங்கள்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தள்ளாத வயதிலும் கழகத்திற்காக தளராமல் பணியாற்றிட வேண்டும் எனும் ஐயனார் போன்ற முன்னோடிகளின் உழைப்பால்

தாராபுரம் இடைத்தேர்தல் முடிவுகளும் கழக வெற்றியினை உறுதி செய்து வரலாற்றில் இடம்பெறும்!

முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!



தாராபுரம், அக்.04- தாராபுரம் இடைத்தேர்தல் பணிகளுக்காக அலங்கியம் ஊராட்சியில் பொறுப்பேற்றுக்கொண்டு, கடந்த இரு வாரங்களாகத் தேர்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இப்பணிகளுக்கு இடையில், வரலாற்றின் போக்கில் அலங்கியம் குறித்த இரண்டு ஆவணங்களைக் காணும் வாய்ப்பு எனக்கு எதிர்பாராத வகையில் கிடைத்தது. ஒன்று, பதி மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு துண்டுக் கல் வெட்டு! இரண்டாவது, 1958ம் ஆண்டிலேயே அன்றைய கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஐயா என்.வி.நடராசன் அவர்கள் அலங்கியத்தில் கழகக் கொடியேற்றி உரையாற்றிய நிகழ்வின் துண்டுப் பிரசுரம்!

முதலாவதாக, 800 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்றும் 'அலங்கியம்' என்ற பெயரே இந்த ஊருக்கு நிலைத்திருக்கிறது என்பதை, கொங்குச் சோழ மன்னனான வீரராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டைப் படித்த போது அறிந்து மகிழ்ந்தேன்.

" ஸ்வஸ்தி ஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு...

பொங்கலூர்க்கா நாட்டில் அலங்கியமா(ன)...

ராசேந்திர அதியமான அவிநாசி ஆளுடைய...

பெருங்கணைச் செல்வியார் ஸ்ரீபண்டாரத்து.. (பொன்)னறக் கொண்டு மண்ணற விற்ற நீர்நிலமாவது

காராண்மைக் காணி அரை மாவும் குறையும் நிபட்ட...."

என்பது அந்தக் கல்வெட்டின் பாடம். கலியுக கன்னீஸ்வரர் அல்லது திண்டீஸ்வரர் கோவில் என அழைக்கப்படும் இவ்வூர் சிவாலயத்தின் கருவறைக்கு முன்னர், தரைத்தளத்தில் பதிக்கப்பட்டுள்ள இந்தக் கல்வெட்டு, இந்த ஊரைச் சேர்ந்த வீரனான ராசேந்திர அதியமான் என்பவர் அவினாசி ஆளுடையார் கோவிலுக்கு நிலக்கொடை வழங்கிய விவரத்தினைத் தெரிவிக்கின்றது.

காலப்போக்கில் மன்னனும், மக்களும், நிலத்தின் எல்லைகளும் மறைந்து போயின; ஊரின் பெயரில் ஒட்டியிருந்த உத்தம சோழ நல்லூர் என்ற பெயரும் கூட மறைந்து போய்விட்டது. ஆனால், அலங்கியம் மட்டும் இன்றும் நிலைத்திருக்கிறது.

இரண்டாவதாக, அலங்கியத்தின் இயக்க வரலாற்றில் 1958ம் ஆண்டு முதல் அழியாத கல்வெட்டாக அமைந்துவிட்ட அந்தக் கொடியேற்று விழா நிகழ்வில் பங்கேற்று, அந்தப் பெருமையுடன் இன்று தாராபுரம் நகரில் கழகத் தலைவர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உரையைக் கேட்கத் தனது 92ம் வயதிலும் துடித்துக் கொண்டிருக்கும் பெரியவர் ஐயா அய்யனார் அவர்களுடன் உரையாடும் வாய்ப்பினைப் பெற்றேன். இளமையிலிருந்து தன் உடலில் ஓடும் 'திராவிட ரத்தம்' குறித்து உணர்ச்சி பொங்கக் குறிப்பிட்ட ஐயா அவர்கள், பதினேழு கழகத் தொண்டர்களை மட்டும் கொண்டு அலங்கியத்தின் காங்கிரஸ் கோட்டையைத் தகர்த்த வரலாற்றை எனக்கு விளக்கினார்கள். உவகையும், உற்சாகமும், உணர்ச்சியும் ஊட்டிய உரையாடல் அது.

கால வெள்ளத்தில் கரைந்து போகாமல் அலங்கியம் நிலைத்து நின்று நெஞ்சினிக்கும் வரலாற்றுச் செய்திகளை நமக்கு உணர்த்துவது போலவே, தள்ளாத வயதிலும் கழகத்திற்காக தளராமல் பணியாற்றிட வேண்டும் என்ற உணர்வு மிக்க ஐயா அய்யனார் போன்ற முன்னோடிகளின் உன்னதமான உழைப்பால், தாராபுரம் இடைத்தேர்தல் முடிவுகளும் கழக வெற்றியினை உறுதி செய்து வரலாற்றில் இடம் பெறும் என்பதே அந்த உரையாடல் எனக்கு உணர்த்திய செய்தி!

இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

டிபன் பாக்ஸ் நிறைய வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கிறீர்களே!

இதுதான் தூய சக்தி செய்யும் வேலையா முதல்வரே!

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!



நெல்லை, அக்.4 - மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் 100 நாள் வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் டிபன் பாக்ஸ் நிறைய வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கிறீர்களே இதுதான் தூய சக்தி செய்யும் வேலையா CMsir? என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது.

சட்டப்பேரவைத் தேர்தலில் பொய்யை மூலதனமாக கொண்டு பிரச்சாரம் செய்தும் பெரும்பான்மை கிடைக்காதால் சோபா நிறையபணம் கொடுத்து எதிரணியில் இருந்த கட்சிகளையே விலைக்கு வாங்கிய நீங்கள் தூய சக்தியா CMsir ?

கட்சிகளை வாங்கியும் பெரும்பான்மைக்கு பாதிப்பு வருமோ என்ற அச்சத்தில் பெட்டி பெட்டியாக பணம் கொடுத்து எம்எல்ஏ.க்களை விலைக்கு வாங்கிய நீங்கள் தூய சக்தியா CMsir?

ரீல்ஸ்களை காட்டி பொய்களை அவிழ்த்து விட்டு இரண்டு தொகுதி இடைத்தேர்தலில் எளிதில் வென்று விடலாம் என்ற உங்களது கனவை பொய்யாக்கும் விதமாக வேட்பாளர்களை ஊருக்குள் நுழைய விடாமல் மக்கள் விரட்டியடிப்பதை பார்த்து பதறி மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் 100 நாள் வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் டிபன் பாக்ஸ் நிறைய வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கிறீர்களே இது தான் தூய சக்தி செய்யும் வேலையா CMsir?

இவ்வாறு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர்கள் தா.மோ. அன்பரசன்- க.சுந்தர் முன்னிலை

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் - புதுப்பட்டு, குன்னங்குளத்தூர், வையாவூர் ஊராட்சிகளில் தீவிர வாக்குச் சேகரிப்பு!

பி.கே.சேகர்பாபு தலைமையில் மேயர் பிரியா ராஜன் – மதிமாறன் – சைதை சாதிக் – ஜோதி வாக்கு சேகரிப்பு!



மதுராந்தகம், அக்.4- மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 10 பாகங்களில் புதுப்பட்டு குன்னங்குளத்தூர், வையாவூர் ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட 9,33,58 ஆகிய பாகங்களில், 02.10.2026 மாலை 4.00 மணி முதல் தீவிர வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சத்திய சாய் நாதன் ஆகியோர் முன்னிலையில் இந்த வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது.

இதில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மதிமாறன், சைதை சாதிக், ஜோதி ஆகியோர் அந்தந்த பாகங்களில் திரண்டிருந்த பொதுமக்களைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

இந்த வாக்குச் சேகரிப்பில் ப.தாயகம் கவி, கே.எஸ்.ரவிச்சந்திரன், ஜோசப் சாமுவேல், டி.எஸ்.பி.ராஜ கோபால், எஸ். ராஜசேகர் எஸ். முரளி, எம்.சரவணன், வெ.பரிமளம், பைசல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வையாவூர், புதுப்பட்டு, குன்னங்குளத்தூர் ஆகிய ஊராட்சிகளின் 3 பாகங்களுக்கான பொறுப்பாளர்கள் ஜெயபால் விஜயகுமார் உதயகுமார் ராஜேந்திரன் ஆர் வாசுதேவன் து. கணேசன் வேலு சக்கரபாணி முத்து எம் எஸ் ஆறுமுகம் இ. தினேஷ் கே மணிகண்டன் ,எம் எச் காமராஜ் சி. வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு!

தமிழ்நாடு மாநில செயலாளர் எஸ்.பாஸ்கரன் அறிக்கை!

சென்னை, அக்.4- இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு மாநில செயலாளர் எஸ்.பாஸ்கரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழக மக்கள் மனதில் என்றும் நிரந்தரமாக முதலமைச்சராக குடியிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.கே)யின் சார்பாக வாழ்த்துக்களும், வணக்கங்களும்!

RSS மற்றும் BJP இயக்கங்களின் பாசிச இந்துத்துவா மதவெறி கொள்கைகளின் நிழல் கூட தமிழ்நாட்டு மக்களை தீண்டிடக் கூடாது எனும் எச்சரிக்கை உணர்வுடன், தமிழ் மக்களின் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை பேணி காத்திட தங்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் வெளிப்படுத்தும் முற்போக்கு கருத்துக்களுக்கும், மேற்கொண்டு வரும் அத்தனை இயக்கங்களுக்கும் எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.கே) தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றது.

கடந்த பத்து ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புச் செயலாளரான ஆர்.எஸ்.பாரதி அவர்களுடன் நானும் எனது கட்சியினரும் தொடர்ந்து தொடர்பிலிருந்து வருகின்றோம்.

2019 மற்றும் 2024 நாடாளுமன்றத் தேர்தல்களிலும், 2021 மற்றும் 2026 சட்டமன்றத் தேர்தலிலும் நாட்டு நலனையும் தமிழ்நாடு மாநில நலனையும் முன்னிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியினை எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.கே)யின் சார்பாக எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் ஆதரித்து கடுமையாகத் தேர்தல் பணி செய்தோம். அத் தேர்தல்களில் CPI,CPM கட்சிகள் கொடுத்த அழுத்தத்தால் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் எவ்வித ஒத்துழைப்பும், அங்கீகாரமும் எங்களுக்கு கிடைக்காவிட்டாலும் எங்கள் இயக்கத் தோழர்கள் சோர்வின்றி தேர்தல் பணியாற்றினார்கள்.

இன்னும் தெளிவாக, சுருக்கமாக எங்களுக்கு ஏற்பட்ட சோதனைகளையும், வேதனைகளையும் தங்களிடம் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். 2024ம் ஆண்டு மார்ச் மாதத்தில் சென்னையில் நடைபெற்ற எங்கள் தமிழ்நாடு மாநில மாநாட்டினை முடக்குவதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் கொடுத்த அழுத்தத்தால் தமிழக காவல்துறையும், அரசு நிர்வாகமும் கடுமையான பல தொல்லைகளை எங்களுக்கு கொடுத்தன. தங்கள் கவனத்திற்கு வராமல் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளால் எங்களது கட்சியின் பெயரையே UCPI என்பதிலிருந்து UCPI (M.K) என நாங்கள் மாற்ற நேர்ந்தது. ஆனால் இத்தனைக்கு பிறகும் இந்திய தேர்தல் ஆணையத்தின் மோசடி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. விஜய் அவர்களின் ஆட்சிக்கு இடதுசாரி கட்சிகள் காங்கிரஸ் மற்றும் விசிக போன்ற கட்சிகள் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு துரோகம் செய்து ஆதரவளித்த நிலையிலும் தமிழ் மக்களின் நலன் கருதி நாங்கள் தொடர்ந்து தங்கள் தலைமையிலான திமுக கூட்டணிக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறோம்.

அதன் அடிப்படையில் வருகின்ற மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல்களிலும், புதுச்சேரி மாநிலத்தின் ஒரு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலிலும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு ஆதரவாக எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி செயல்பட்டு வருகின்றது என்பதையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல் இனிவரும் காலங்களிலும் மதவெறி பாசிச பாஜக எதிர்ப்பிலும், மக்கள் விரோத தா.வெ.க.வின் அராஜக ஆட்சியினை எதிர்ப்பதிலும் தங்கள் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகம் முன்னெடுக்கும் அனைத்து போராட்டங்களிலும் எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.கே)யும் உற்சாகமுடன் பங்கேற்கும் என தோழமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் இடைத்தேர்தலில் மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் மங்கலம் கிராமத்தில் தொழிலாளர் அணி மாநில செயலாளர் பி.டி.சி. செல்வராஜ் தலைமையில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தொழிலாளி அணி அமைப்பாளர் ப.கார்த்திகேயன் சென்னை மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் மாவட்ட துணை அமைப்பாளர் எஸ் பிரசன்னா அவர்களும் மற்றும் கழக நிர்வாகிகளும் தீவிரமாக வாக்கு சேகரித்தனர்.



மதுராந்தகம் தனி இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வேட்பாளர் இ பரந்தாமனுக்கு அருங்குணம் ஊராட்சியில் உள்ள பாகம் 238-ல் அடங்கிய புளியரணங்கோட்டை ரோடு, மேட்டு தெரு, பிராமணர் தெரு, ஏரிக்கரை தெரு, தெற்கு தெரு, வையத் தெருக்களில் ஆலந்தூர் தெற்கு, வடக்குப் பகுதி செயலாளர்கள் என். சந்திரன் எம்.சி, பா. குணாளன், ஆகியோர் தலைமையில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர். இப்பிரச்சாரத்தில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆர். டி. பூபாலன், மாவட்ட அ. அமைப்பாளர்கள் ஆர். ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், நெய்வேலி தங்கம், வட்ட செயலாளர்கள் ஜெ. நடராஜன், ஏ. சாலமோன், ஜெ. செல்வேந்திரன், கிளை செயலாளர்கள் மகாலிங்கம், மாரியப்பன், சுரேஷ், தேவராஜ், நிர்வாகிகள் பிரான்சிஸ், மீன் மோகன், அசோக்குமார், சுரேஷ், கோபி, சத்யா, மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் உடன் இருந்தனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, அச்சிறுபாக்கம் தெற்கு ஒன்றியம், கடமலைபுத்தூர் கிராமத்தில், தொ.மு.ச. பேரவை தலைவர் கி. நடராசன் தலைமையில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில் ஜி.ஆர்.வசந்தவேல், என்.வேலு, கோ.சி.வள்ளுவன், இரா.பொன்னுராம், வே. வேலுசுவாமி, பா.மணிமாறன், ஜெ.விஜயகுமார், ஆ.சீ.அருணகிரி, ப.பன்னீர்செல்வம், எம்.சண்முகம், என்.தனசேகரன், ஆர்.சண்முகசுந்தரம், மா.அருணகிரிநாதன், சு.பத்மநாபன், சண்முகசுந்தரம், ரவி, வி.மகேந்திரன், த.சரவணகுமார், கி.சீனிவாசன், அ.தங்கராஜ், நா.செல்வகுமார், மு.ஜோதி மற்றும் தொ.மு.ச. பேரவை இணைப்பு சங்க நிர்வாகிகள், செயல்வீரர்கள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.